## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 107/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 7<br>Defense<br>Court |
| Name | திரு. பரமேஸ்வரன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

*எதிரிகள்*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of February 2024.

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 14.10.2016 ஆம் தேதி 16.30 மணிக்கு எஸ்.எஸ்.ஐ முருகன் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது சிலையம் ஏசுதாஸன் மனைவி மரியசெல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 126/2016 இதச பிரிவுகள் 294(பி), 323, and 4 of TnPHW Act என்ற வழக்கை பதிவு செய்தார். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை நான் விசாரணைக்கு எடுத்துகொண்டு 14.10.2016 ஆம் தேதி 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் இருதயராஜ், அசோக் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும்.

சாட்சிகள் மரியசெல்வம், விமல்ராணி, ஏசுதாசன், முருகன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தேன். வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் நசீர் அகமது அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது

14.10.2016 ஆம் தேதி 20.30 மணிக்கு எதிரிகளை மூலைக்கரைப்பட்டி பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, and 4 of TNPHW Act ன் படி குற்றப்பத்ரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.